

# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லா இலாஹ இல்லல்லாஹ்
முஹம்மதுறஸூலுல்லாஹ்"

புத். 1. { அறபிஹு 1312 ஜமாதுல் அவ்வல்மீ 15உ செ.கி
இங்கிலிஷ் ஹு 1894 நவெம்பர்மீ 13உ செ.இ } இல. 19.

## பூகம்பம்.

[சென்ற 18 மிலக்கம் 145 பக்கத் தொடர்ச்சி.]

இந்தக் கம்பமும் கொடுமையில் முதற்கம்பத்திற்குக் குறைந்திருக்கவில்லை. இந்தக் கம்பத்தினால் இதற்கு முன் ஆடிக்கொண்டிருந்த கட்டிடங்களெல்லாம் இடிந்து அழிந்துபோயின இதனால் சமஸ்தமான பேரும் அதிக பயமடைந்து வெகு தூரம் கேட்கும்படி வீரிடவும் கூச்சலிடவும் தொடங்கினார்கள் இதனுடன் கூட கிராமக் கோயிலும் இடிந்து விழுந்து அநேகர் அதின் கீழே இறந்துபோயினார்கள். இப்படி இருக்கும்போது திடீர் என்று "கடல் பொங்கிவருகிறது, நாமெல்லாம் இறந்து போவோம்" என்று ஒரு பெருங் கூச்சலுண்டாயிற்று. இதைக்கேட்டு டேகஸ் நதியைத் திரும்பிப் பார்த்ததில் இவ்விடத்தில் நாலு மைல் அகலமுள்ள டேகஸ் நதியில் தண்ணீரானது மலைபோல எழும்பி கொப்பும் நுரையுமாய் இரைச்சலிட்டுக்கொண்டு கரையைநோக்கி வெகு வேகமாய் ஓடிவந்துகொண்டிருந்தது. நாங்களெல்லாரும் உயி

ரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடினோம். அப்படி ஓடியும் வெகு ஜனங்களைத் தண்ணீர் அடித்துக்கொண்டு போய்விட்டது. நான் மாத்திரம் அங்கே தரையில் கிடந்த ஒரு மரத்துண்டை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு இருந்ததினால் தப்பினேன். அப்படிப் பிடித்துக் கொள்ளாவிட்டால் நானும் தண்ணீரில் போயிருக்க வேண்டியதுதான். அப்போது தரையில் எவ்வளவு அபாயமோ அவ்வளவு அபாயம் தண்ணீரிலும் இருப்பதாகத் தெரியவந்தபடியால், நான் மறுபடியும் முன்னே சொல்லிய ஸெண்ட் பால்ஸ் சர்ச்சு என்கிற கோயிலின்முன் இருக்கிற மைதானத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே சற்று நின்று கப்பல்களைப் பார்த்ததில் கப்பல்களெல்லாம் எவ்வளவும் காற்றின் அசைவில்லாமலே ஒரு பெருங் காற்றடித்தாற்போலக் கவிழ்கின்றனவாயும் மூலைக்கு மூலை ஓடுகின்றனவாயும் அலைந்துகொண்டிருந்தன. சில நங்கூரங்கள் அறுந்துபோய் டேகஸ் நதியின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு ஓடிப்போயின. சில கப்பல்கள் சொல்லுங் கம்பத்தகாத வேகத்தோடு சுழன்றுகொண்டிருந்தன. பெரிய படவுகள் அநேகம் அநேகமாய்க் கவிழ்ந்து போயின. இந்தச் சமயத்தில்தான் அவ்விடத்தில் சரக்குகளின் ஏற்றுமதி இறக்குமதிக்காகச் சலவைக் கல்லினால் கட்டப்பட்டிருந்த பியர் என்கிற பாலம் முழுகிப்போய் அதின்மேல் உயிர் தப்புதற்காகப் போய்ச் சேர்ந்திருந்த ஜனங்கள் அனைவரும் அதனோடே கூடி பூமியினால் விழுங்கப் பட்டார்கள். அந்த மேடையோடுகூட அதற்குச் சமீபத்திலிருந்த படவுகளும் சிறு கப்பல்களும் அலைகளில் உயிர் காப்பதற்காக வந்து சேர்ந்திருந்த ஜனக் கூட்டங்களுடன் ஒரு சுழலில் இழுத்துக்கொள்ளப் படுவனபோல் விழுங்கப்பட்டன. இந்த மேடை அமிழ்ந்தவுடன் அதை விழுங்கின பிளப்பானது மறுபடியும் குவிந்துகொண்டு அந்த இடத்தில் மேடையிருந்ததற்காவது கப்பல்கள் இருந்ததற்காவது யாதோர் அடையாளமும் இல்லாமல் எல்லாம் தண்ணீராய் இருந்தது. அந்தத் தண்ணீரின் ஆழமும் அளந்தறியக் கூடாமையா யிருந்தது. மேற்கண்ட ஸெண்ட் பால்ஸ் சர்ச்சு என்கிற கோயில் மைதானத்துக்கு நான் வந்து சேர்ந்த சற்றுநேரத்துக் கெல்லாம் பூமியானது மூன்றாந்தடவை நடுங்கத்தொடங்கிற்று. இதில் கடல் முன் போலவே பொங்கிவந்தபோதிலும் நடுக்கம்மாத்திரம் முன்னைவ்வளவு உக்கிரமா யிருக்கவில்லை. ஆனால் பொங்கிவந்த கடல் திரும்பிப்போன வேகம் எப்படிப் பட்டதென்றால், பொங்கிவருவதற்குமுன் ஏழாள் ஆழத்திலிருந்த கப்பல்களெல்லாம் திரும்பும்போது வெறுந் தரையில் விட்டு விடப்பட்டன. இந்தப் பூகம்பத்தில் இறந்துபோனவர்கள் ஏறக்குறைய அறுபதினாயிரம் பேர் இருக்கும். மிகுந்த பரப்புள்ளதாயும் செல்வம் மலிந்திருந்த இந்தப் பட்டணம் அப்போது இடிந்த கட்டிடங்கள் மாத்தி

ரமாகவே இருந்தது. முன்செல்வமுள்ளவர்களாய் இருந்தவர்களும் வறியவர்களாய் இருந்தவர்களும் எல்லோரும் அப்போது சமமான ஸ்திதியிலிருந்தார்கள். அடுத்த முந்திய தினத்தில் கூடுமானவரையில் சௌக்கியமான ஸ்திதியிலிருந்த அநேக குடும்பங்கள் அப்போது பராரியாய் வெளியில் வந்து வீட்டுச் சுகத்தைத் தருவிக்கும் உபகரணமும் யாதொன்றும் இல்லாதவராயும், அவைகளைக் கொடுத்து உதவிசெய்யத்தக்கவர் யாருமில்லாதவராயும் இருந்தார்கள்.

இங்கே சொல்லியிருப்பதல்லாமல் இந்தப் பூகம்பங்களால் அநேக இடங்களிலிருந்த ஊற்றுகள் தூர்ந்துபோகிறதும் இல்லாத இடங்களில் ஊற்றுகள் உண்டாகிறதும் உண்டு. நதிகளெல்லாம் வழக்கமாய்ப் போய்க்கொண்டிருக்கிற ஒழுங்குகளை விட்டு வேறு மார்க்கத்தில் பிரவகிக்கத் தொடங்குவதும் உண்டு.

இந்தப் பூகம்பங்களால் செய்யப்பட்ட தீங்கு இவ்வளவு விஸ்தாரமாயிருந்தாலும், இவ்வளவு தீங்கையும் முடிப்பதற்குச் சென்ற காலம் வெகு அற்பமானதாயிருந்தது. மேலே சொல்லியவாறு லிஸ்பன் பட்டணத்தை அடியோடு அழித்துவிட்ட பூகம்பம் ஐந்து நிமிஷத்திற்கு மேல் இருக்கவில்லை.

(இன்னும் வரும்)

# இமாம் அபுல்ஹஸன் சாதுலி றஹ்மஹுல்லாஃ அவர்கள் சரித்திரம்.

[சென்ற 17-மிலக்கம் 141-ம் பக்கத் தொடர்ச்சி.]

செய்கு அப்துல்லாஹில் ஹுஸைனி றஹ்மஹுல்லாஃ அவர்களாற் கூறப்பட்டதாவது:—

நானும், என் நாயகம் அபுல் ஹஸன் சாதுலி றஹ்மஹுல்லாஃ அவர்களும் குன்றும மலை என்று சொல்லப்படுகிற "ஜபல்சஉபருன்" என்னும் பருவதத்தில் நாற்பது நாட்கள் தங்கியிருந்துவிட்டு, அம்மலையை விட்டுக் கீழேயிறங்கி வரும்போது, நாயகம் அவர்கள் என்னை விளித்து "அப்துல்லாஃவே! நான் பாதையைவிட்டுத் திரும்பினால் நீர் என்னைத் தொடராதீர்" என்றார்கள். அப்படிச் சொல்லிய சில நிமிஷங்களில் அவர்கள் நடந்து வந்த பாதையால் அப்புறப்பட்டுப் பிரிந்து போவதைக் கண்டு எனக்கு நாயகம் முன் எச்சரித்த பிரகாரம் பின் தொடராது, நின்று விட்டேன். இவர்கள் கொஞ்சம் அகலப்போகவே ஆகாய மண்டலத்திலிருந்து நான்கு பெரிய பறவைகள் இறங்கி இவர்களின் தலைக்கு மேலே உயர வட்டமிட்டுத் திரிக்கக் கண்டேன். வேறு அநேக

தனம் முதலியவைகளோடு கூடியனுபவிக்குமின்பம் எதுகாறும்? இவ்வான்மா மெய்யை விட்டு நீங்கும் காறும். எப்போதாயினுங் கூற்றுவராகிய இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் ரூஹ் வாங்கவந்த சமயத்தில் மேல் காட்டிய தாய் முதலியோர் பின்றொடர்வார்களா? ஆனாலொருமையிற்றான் கற்ற கல்வி எப்பொழுது மவ்வுயிருடன் நீங்காது நிற்கும். கல்வியைக்கற்று, வந்தனையானந் தவறாது புரிந்து தேவபயத்தோடு நடந்தால், மரணத்தின் பின்னர், அந்த வணக்கங்களே துணையாக நின்று கார்க்கும். கல்வியினால் வணக்கமும் வணக்கத்தால் மோட்சலாபமும் அடையலாம். இவற்றை எல்லாமறிந்து கல்வி கற்காமற் றங்கள் வாணாளை வீணாய்த் தீயவைகட்குப் பகிர்ந்திடும் பேதை மாணிடர்களுக்குக் கற்றறிந்த பெரியோர் புத்தி புகட்டாதிருப்பதறமோ?

எங்களுடைய இந்த அற்ப ஆயுட்காலத்தில் கற்கவேண்டியதையுஞ்செய்யவேண்டியதையும் அவமே இழந்து விடுவோமானால் பின்னால் கை சேதப்பட்டு புரிதாபப் படுவோம். அங்ஙனமாகாது கல்வியைக் கற்று மேன்மையைப் பெற்று தவம் பல புரிந்து பாவத்தை தவிழ்ந்து நபிகள் பெருமானாரவர்களது இரட்சிப்பின் வழியால் மோட்ச லாயம் பெற முயல்வோமாக.

## பிரயாணத்தின் பலன்.

பிரயாணத்தினாலே அறிவு பூரணமடைகிறது ஆதலால் பிரயாணம் பண்ணாதவன் எவ்வளவு படிப்பும் ஆராய்ச்சியும் உடையவனாயிருந்தாலும் அவனைப் பூரண அறிவாளி என்பதற்கு ஏதுவில்லை. ஆகவே சங்கதிகளை ஐயந்திரிபற அறிந்து உணரவேண்டியவன் பிரயாணம் பண்ணவேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது.

யாத்திரையினால் உண்டாகும் அறிவு பலவிதமானது. புத்திவிற்பன்னமுள்ள ஒருவன் அன்னிய இடங்களுக்குப்போனால் அவ்விடங்களிலுள்ள நூதனங்களையும், அவ்விடத்திற்குரிய விசேஷித்த நூல்களையும், அங்குள்ள ஆட்களையும் கவனியாதிரான்.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தேசத்தின் பல பாகங்களில் பிரயாணம்பண்ணினாலும்கூட பெரிய அறிவாளிகளாய்ப் போய்விடுவார்கள். ஐரோப்பாக் கண்டங்களைவிட, இப்போது இந்தியாவிலே ஆயிரத்திற் கதிகமான முக்கிய பட்டணங்களிருக்கிறது. ஒருவன் இந்தப் பட்டணங்களுக்கெல்லாம் சென்று, ஒரு பட்டணத்தில் மூன்று முக்கிய காரியம் விகிதம் கவனித்தாலும், அவன் அகன்ற அறிஞனாகவும், எவ்விஷயத்தை குறித்தும் இலகுவிலே எழுதத்தக்க சமர்த்தனாகவும், அநேகருக்குச் சரியான ஆலோசனை சொல்லக் கூடியவனாகவும் ஆவான்.

அன்னிய தேசத்து நூல்களை வாசித்து, அவைகளை அவ்விடங்களின் காட்சிகளினாலும் சரித்திரங்களினாலும் அறிவாளிகளினாலும் அறிந்துகொள்ள

ஏதுவிருப்பதால், அந்நூல்களில் கூறியிருக்கும் காரியங்கள் பாரிசேடமின்றி யதார்த்தமாய் நமக்குப்புலப்படும். மேலும் பல பாஷைகளையும் பலவித அட்சரங்களையும் கற்றுக்கொள்ள ஏதுவுண்டாகிறது.

புத்தியுள்ள பிரயாணி தான் போகும் இடங்களிலுள்ள நகரவாசிகளையும் கல்விமான்களையும் மற்றும் ஆட்களையும் கண்டு, அவர்களோடு சம்பாஷிக்க ஏதுவுண்டாகிறபடியால், அவன் அறிவு பல விஷயங்களிலும் அகன்று அதிகரிக்கிறது.

இந்தியாவை ஒரு சிறு உலகம் என்னலாம். அதிலே பிரயாணம் பண்ணுகிறவன் சற்றேறக்குறைய உலக முழுதிலும் பிரயாணம் பண்ணுகிறவன் கவனிக்கிற பலவிதமான தேச சுவாத்தியங்களையும் காட்சி பேதத்தையும் ஆட் பேதம் பாஷை பேதங்களையும் காணுகிறான். ஆதலால் இந்து தேசத்தான் ஒருவன் இந்தியாவின் பல பாகங்களையும் சுற்றிப்பிரயாணம் பண்ணுவதே அவனை மிகவும் பெரியனாக்கத்தக்கதாயிருக்கிறது. மேலும் அவன் ஒரு இந்துதேச வாசியாய் தன்னுடைய பெந்துக்களைப் பல விடங்களில் காணக்கூடியவனா யிருக்கிறபடியால், அவன் தன் பிரயாணத்தில் அதிகமான பொருள் செலவு செய்ய வேண்டியதிராது. இவைகளைக் கவனிக்கும்போது ஒரு இந்து தேசத்தான் தன் சுய தேசத்தைச் சுற்றிப் பிரயாணம்பண்ணிப் பல நன்மைகளடைவதற்கு அவனுக்கு நல்ல அனுகூலங்களிருக்கிறது என்று தெளிவாய் விளங்குகிறது. இலங்கையில் அவ்வளவு விசாலமான பட்டணங்களிராது போனாலும் காடு மலை செடி, கெவி, ஆறருவிகளும், நூதன ஸ்தலங்களு முண்டா யிருக்கின்றன. அவைகள் சில போது இந்தியாவைப்பார்க்க சிறந்தனவாம்.

~~~~~~~~~~~~~

## மெய்ஞ்ஞான விளக்கம்.

செய்கு என்று வெளிவேஷம் போட்டுக்கொண்டு மறுமைக்காக இம்மையை விற்கும் கள்ளக் குருமார்களின் கைகளைப் பிடித்து உபதேசம் பெற்று மோசமடைகிறதைப் பற்றியும், கள்ளச் சேகுமார்கள் பலவித மாகிய அர்த்த பேதமான வார்த்தைகளை "திக்று" (தியான மந்திரம்) என்று சொல்லிக் கொடுத்துக் கெடுத்துப்போட்டார்க ளென்றும், இனி மேலுங் கெடுத்துப்போடாது எச்சரிக்கையாயிருக்கவேணுமென்றும், சத்தியத்தின் வழியை நெகிழ விடாது பின்பற்றி நடக்கவேண்டுமென்றுஞ் சென்ற 17 மிலக்கப் பத்திரிகையிற் சொன்னோம்.

ஆசாரத்துக்குரிய மித்திரர்களே! உங்கள் ஹிருதயத்தில் தேவ பய பக்தியுண்டாயிருக்குமானால் நாம் சொல்லும் ஞான வார்த்தைகளை அங்கிகரித்து சத்தியமென்னும் உண்மையைப் பின்பற்றி நடக்கப் பின்னிடையீர்கள். "தேவ பய பக்தியே கனதி, தாழ்மையே மரியாதி, உண்மை
~~~~~~~~~~~~~

யே வாழ்வு" என்று இரட்சக நாயகர் நபிகள்பெருமானார் அவர்கள்திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்கள். இதனால் உண்மையைப்பற்றி நடக்கிறவர்களுக்கே மெய்யாகிய வாழ்வுண்டென்பது நன்கு புலப்படுகின்றது. நேற்றுப்பிறந்தான் இன்றைக் கிறந்தான் என்னும் பெருமையை யுடையது இவ்வுலகு. சரீரம் நாசமடைந்துபோகின்ற வோர் கூண்டு. பூலோகத்திலே நாம் எவ்வளவு தங்கவேண்டுமென்று தெண்டித்தாலும் அது முடியாது. நாம் இந்தப் பூலோகத்தில் வாழுங்காலம் மிகச் சொற்பமென்பதும் நாம் பின்னுமொரு பயணத்துக்கு நிச்சயப்பட்டிருக்கிறோமென்பதும் திட்டம். மித்திரர்களே! இது நீங்கள் மறுக்கப்படா விஷயங்களல்லவா? இந்தக் கொஞ்சக் காலத்துக் கிடையிலே மனிதனுக்கு விசாரங்களும் கவலைகளும் அனேகம். எவ்வளவு பொருட்களைச் சம்பாதித்தாலும் அதனால் மனத்திருப்தியில்லை மனத்திருப்தியற்றதினால் சந்தோஷமில்லை. அப்படித்தானே சந்தோஷமாய் வாழ்ந்தாலும், நிச்சயமாகவே இனிமேல் வரப்போகிற மரணத்தை நினைத்தால் பெரும் பயமாயிருக்கிறது. சந்தோஷமெல்லாம் துக்கமாய் மாறிவிடுகின்றது. அந்த மரணம் வருமுன்னர் நந்நிலையாய் நடந்துகொள்ளும்படி முஸ்லிமாகிய மித்திரர்களை சர்க்குருவாகிய ஒரு செய்கைத் தெரிந்து அவரால் நபிகள் நாயகத்தின் நெறி முறை நீதி வழியிற் சேர்த்துவைக்க உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டியது. அஃதன்றி, காட்டான், மேட்டான்களை செய்கு என்று பிடித்து, வீண் வார்த்தைகளை (மகுனு) பொருளறியாமல் "திக்ரு" என்று சொல்லிக் கொண்டு காலத்தை அவமே கழித்துவிட்டால், பின்னால் தாபப்படவேண்டியதாகிவிடும்.

ஆகையால் ஹக்குத்தஆலா உடைய நேர் பாதையில் கொண்டுபோய் விடும்படி எங்கள் ஆன்மத்துணைவராய், அதை முத்தியிற் சேர்ப்பிக்கக்கூடிய குருவைப்பற்றிப் பிடித்து, தொழுகை முதலிய விதிக்கப்பட்ட நேமநிஷ்டைகளைத் தவறாது முடித்துவர வேண்டியது.

தரீக்குகள் விஷயத்தில் தருக்கமிடத்துணிகிறது மடமைத்தனமே. தரீக்குகள் உண்மையானவைகளே. சில அறிவிலிகள் வயற்றுற்றுமைக்காக, உண்மையான தரீக்குகளின் பேரை சொல்லி நஸிஹத்துக்கொடுத்து அவர்களின் நஞ்சுப் பையிலிருந்து மனிதர்களின் ஈமானைக் கொல்லத்தக்க, நஞ்சுகளை உபதேசமாகக் கொடுக்கின்றார்கள். இவை பால் என்றும் நஞ்சு என்றும் பிரித்தறியக்கூடிய "அக்கில்" (விவேகம்) உங்களிடத்திலிருக்குமேல், அதனால் பகுத்தறிந்து நாசமடையாது காற்றுக்கொள்வீர்கள். அப்படி ஆராய்ந்து காற்றுக்கொள்ளும்படியே நாம் உங்களுக்கு ஏற்கனவே எச்சரிக்கையாய் இதனை யுணர்த்துகின்றோம்.

ஆசாரத்துக்குடைய இஸ்லாம் மித்திரர்களே! நீங்கள் இஸ்லாமிலிருக்கிறீர்கள் என்றும் உங்களுக்கு செய்குமார்களின் உபதேசம் உண்டென்றும் மருண்டு அச்சர்த்திர வேண்டாம். ஏனென்றால், உங்களுடைய ஒடுக்கம் எத்தன்மையாய் முடியுமென்பதை நீங்கள் அறியாதவர்களாயிருப்பதினாலேயே.

இன்னும் வரும்.